ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1875/14 - 2014 අගෝස්තු මස 11 වැනි සඳුදා - 2014.08.11
*1875/ 14 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) நியதிச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான மத்திய மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரத்தத்துவங்களை உரிமைமாற்றஞ் செய்தல்**

மத்திய மாகாண சபையின் முதல் அமைச்சரும் நிதி திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு, கல்வி, கலாசார அலுவல்கள், சுற்றுலா, காணி, உணவு விநியோகமும் பகிர்ந்தளிப்பும், முதலீட்டு தொடர்பிணைப்பு மற்றும் ஏனைய அமைச்சுக்களின் விடயங்களுக்குள் அடங்காத விடயங்கள் ஆகிய அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பான அமைச்சருமாகிய சரத் ஏக்கநாயக்க ஆகிய நான், எனக்கு மத்திய மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) நியதிச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான மத்திய மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் இரண்டாவது, நான்காவது உப பிரிவுகளின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களுக்கு ஏற்ப, கீழ்வரும் அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள மத்திய மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு (திணைக்கள) III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களை II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து அமுலுக்குவருமாறு உரிமை மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| திரு. ஏ. ஜீ. குணதிலக்க<br>திருமதி ஆர். எம். அய்டா குமாரிஹாமி<br>திருமதி எச். எம். பத்மலதா ஹேரத்<br>திரு. பீ. எம். விமலசிரி | 2014.02.13 | மத்தி மாகாண சபையின் 1993 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின்படி திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க மத்திய மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 3, 5, 6, 7, 8, 9, 33, 43, 43 (அ), 44, 45, 46, 48, 52, 53, 54, 58, (2அ, 3, 4, 5 உப பிரிவுகள் தவிர்ந்த) 59, 60அ, 66, 67, 68, 69, 74, 75 விதிகளினதும் 1973 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்கங்கள் விதித் தொகுதியின் 4, 11, 15, 16 (II), 18, 19, 20, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 43, 48, 49, (1, 2அ, இ, ஈ, உ ஆகிய உப பிரிவுகள் தவிர்ந்த) 51, 52, 53 ஆகிய விதிகளினாலும் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்கள். |

சரத் ஏக்கநாயக்க,
முதல் அமைச்சரும் நிதி, திட்டமிடல், சட்டமும்
ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு, கல்வி,
கலாசார அலுவல்கள், சுற்றுலா, காணி, உணவு விநியோகமும் பகிர்ந்தளிப்பும்,
முதலீட்டு தொடர்பிணைப்பு மற்றும் ஏனைய அமைச்சுக்களின் விடயங்களுக்குள்
அடங்காத விடயங்கள் ஆகிய அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பான
அமைச்சரும்,
மத்திய மாகாண மாகாண சபை.

*8- 891*


இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.